**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்.</u>**

**<u>முன்னிலை</u> : திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கிருஷ்ணராயபுரம்.**

திருவள்ளுவராண்டு 2055 பராபவ வருடம், ஆனி மாதம் 02 –ஆம் நாள்

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 16 –ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**<u>சுருக்கு விசாரணை வழக்கு எண். 1/2026</u>**

**<u>CNR.NO. TNKR11-001756-2025</u>**

**<u>DVC No. 02/2021</u>**

1.பரிமளா
2.இளவர்.யாகஸ்ரீ
3.இளவர்.சிவஸ்ரீ ... மனுதாரர்கள்

**/ எதிர்/**

1. பூமிநாதன்
2. தவசு (எ) செவ்வந்தி
3. ராசு ...எதிர்மனுதாரர்கள்

| | | |
|---|---|---|
| 1. | Name of the court | District Munsif Cum Judicial Magistrate, Krishnarayapuram |
| 2. | Name of the Judge | Thiru.R.Bagyaraj, B.A., B.L., |
| 3. | Date of Judgment | 16.06.2026 |
| 4. | Case Number along with CNR Number | STC 1/2026,<br>CNR.NO. TNKR11-001756-2025 |
| 5. | Name of the Parties of the case | 1.பரிமளா<br>2.இளவர்.யாகஸ்ரீ<br>3.இளவர்.சிவஸ்ரீ<br>//எதிரி //<br>1. பூமிநாதன்<br>2. தவசு (எ) செவ்வந்தி<br>3. ராசு |
| 6. | Date of Occurrence | 24.07.2024 ம் தேதியும் தொடர்ந்து அதற்கு பின்னிட்டு ஒவ்வொரு நாளும் |

| | | |
|---|---|---|
| 7. | Date of Complaint | 21.01.2026 |
| 8. | Date of Arrest if any and Remand | Nil |
| 9. | Period of remand of the accused | Nil |
| 10. | Date of Release on bail | Nil |
| 11. | Date of Final report | Private complaint filed on 21.01.2026 |
| 12. | Date of Committal of the case to the Court of Session | Nil |
| 13. | Date of questioning of the accused U/s.251 Crpc | 12.02.2026 |
| 14. | Date of examination in Chief and Cross examination of the witness | No. of. Witness / Chief / Cross<br>PW-1 / 24.02.2026 / 10.03.2026<br>DW-1 / 05.05.2026 / 05.05.2026 |
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior Courts except routine petitions like petition under section 317 of the Code | Nil |
| 16 | Date of examination of the accused U/s. 313 of the | 18.03.2026 |

| | | |
|---|---|---|
| | Code | |
| 17. | Details of abscondence of an accused and his appearance/production as the case may be | Nil |
| 18. | Grant of stay by Superior Courts and the results thereof | Nil |
| 19. | Date of Commencement of Trial | 24.02.2026 |
| 20. | Date of closure of Trial | 05.05.2026 |
| 21. | Date of Sentence or order | 16.06.2026 |
| 22. | Date of service of copy of judgment to the accused | Nil |
| 23. | If any delay, give explanation | No |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 23.01.2026–ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 03.06.2026 ஆம் நாள் என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து, மனுதாரர்களுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சசிக்குமார் அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், 1 முதல் 3 எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.சரவணன் அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், இருதரப்பு ஆவணங்கள் பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

| | |
|---|---|
| புகார்தாரர் | 1.பரிமளா<br>2.இளவர்.யாகஸ்ரீ<br>3.இளவர்.சிவஸ்ரீ |
| எதிரிகளின் பெயர் | 1. பூமிநாதன்<br>2. தவசு (எ) செவ்வந்தி |

| | |
|---|---|
| | 3. ராசு |
| மனுதாரர்கள் எதிரிகள் மீது சாட்டப்பட்ட குற்றம் | குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்ட பிரிவு 31 |
| நீதிமன்றத்தால் எதிரிகள் மீது எடுத்துரைக்கப்பட்ட குற்ற முகாந்திரம் | குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்ட பிரிவு 31 |
| 1ம் எதிரியின் பதில் | குற்றவாளி அல்ல |
| நீதிபதியின் முடிவு | 1ம் எதிர்மனுதாரர் குற்றவாளி ஆவார். 2, 3 எதிர்மனுதாரர்கள் குற்றவாளிகள் அல்ல. |
| மனுதாரரின் குற்ற வழக்கறிஞர் | திரு.M.சசிக்குமார் |
| எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | திரு.P.சரவணன் |
| இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட நாள் | 03.06.2026 |
| தீர்ப்பு வழங்கப்பட்ட நாள் | 16.06.2026 |

## தீர்ப்புரை

இவ்வழக்கானது 1ம் மனுதாரர் திருமதி பரிமளா என்பவரால் குடும்ப வன் முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டப் பிரிவு 31ன்படி 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு கடந்த 24.07.2024 அன்று இந்நீதிமன்றம் DV No. 2/2021ல் வழங்கிய உத்தரவை நடைமுறைப்படுத்தாதற்கும், மீறிய செயலுக்கும் தண்டனை வழங்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## மனுவின் சுருக்கம்

1) 1ம் மனுதாரர் தனது இரண்டு இளவர் பெண் குழந்தையுடன் வசித்து வருகிறார். 1ம் எதிர்மனுதாரர், 1ம் மனுதாரரின் கணவர் ஆவார். மனுதாரர் 2, 3 இளவர் மனுதாரர்களுக்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார். 1ம் மனுதாரர் தனக்காகவும், தனது இரு குழந்தைகளுக்காகவும் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் படி மாவட்ட சமூக நல ஆர்வலர்கள் மூலம் DVC 2/2021 தாக்கல் செய்யப்பட்டு கடந்த 24.07.2024

ம் தேதி மனுதாரர்களுக்கு பாதுகாப்பு உத்தரவும், திருமணத்தின் போது போட்ட 9 பவுன் திருப்பி தர வேண்டும் என்றும், பெண் குழந்தைகளுக்கு அரசு கொடுத்த உதவித்தொகை ரூ.18,000/– த்தை 1ம் எதிர்மனுதாரர் திரும்ப கொடுக்க வேண்டும் என்று மனுதாரர்களுக்கு ஜீவனாம்சமாக மாதம் ரூ.15,000/– கொடுக்க வேண்டும் என்றும் இழப்பீடாக ரூ.25,000/– கொடுக்க வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்து மேற்படி உத்தரவுக்கு எதிராக எதிர்மனுதாரர்கள் கரூர் மகிளா நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்து 9 பவுன் தர வேண்டும் என்பது 6 பவுன் என்று குறைக்கப்பட்டும் மாதம் ஜீவனாம்சம் ரூ.15,000/– என்பது ரூ.12,000/– ஆக குறைக்கப்பட்டு மாற்றி அமைக்கப்பட்டு மற்ற உத்தரவுகளை பொறுத்து உறுதி செய்து 10.09.2025 அன்று மேல்முறையீட்டு வழக்கு எண்.169/2024 உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2) எதிர்மனுதாரர்கள் மேற்படி உத்தரவினை இன்று வரை நிறைவேற்றவில்லை. எதிர்மனுதாரருக்கு நல்ல வசதி வாய்ப்பு உள்ளது. சொந்த வீட்டில் வாழ்ந்து வருகிறார். இரண்டு கடைகள் வாடகைக்கு விட்டு அதன் மூலம் ரூ.20,000/– வருமானம் ஈட்டி வருகிறார். மேலும், டிராக்டர், டிப்பர் வைத்து மாதம் ரூ.40,000/– வருமானம் ஈட்டி வருகிறார். 2 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து வருடம் ரூ.3,00,000/– வருமானம் ஈட்டி வருகிறார். மொத்தம் ரூ.7,15,000/– 1ம் எதிர்மனுதாரர் செலுத்த கடமைப்பட்டுள்ளார். புகார்தாரரின் 6 பவுன் நகைகளை 1ம் எதிர்மனுதாரர் வழங்க கடமைப்பட்டுள்ளார். வசிப்பிட உத்தரவு வழங்க கடமைப்பட்டுள்ளார் அதனால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** 1 ம் எதிர்மனுதாரர் ஆஜரானவுடன் வழக்கு ஆவண நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டு கடந்த 12.02.2026 அன்று குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டப்பிரிவு 31ன் படி குற்றமுகாந்திரம் எடுத்துரைத்து வினவிய போது குற்றமுகாந்திரத்தை மறுத்துரைத்துள்ளார். அதனால் மனுதாரர் தரப்பு சாட்சிக்கு உத்தரவிடப்பட்டு மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரணை செய்து ம.சா.ஆ.1, ம.சா.ஆ.2 ஆவணங்கள் குறியீடு செய்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) மனுதாரர் பரிமளா தனது சாட்சியத்தில், குடும்ப வன்முறையிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டப்பிரிவு 31ன்படி தாக்கல்

செய்த மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை அப்படியே முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளார். ம.சா.ஆ.1 ஆக இந்நீதிமன்றம் DVC NO. 2/2021 வழக்கில் வழங்கிய உத்தரவு சான்றிட்ட நகல் மற்றும் ம.சா.ஆ.2 ஆக மாண்புமிகு கரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றம் Criminal Appeal No. 169/2024 என்ற மனுவின் மீது வழங்கிய உத்தரவு சான்றிட்ட நகல் குறியீடு செய்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.சா.ஆ.1 ஆக இந்து திருமண அசல் மனு எண்.14/2014 வழக்கில் வழங்கிய உத்தரவு சான்றிட்ட நகல் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5) 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக உள்ள சாட்சிய சங்கதிகளை கு.வி.மு.ச. பிரிவு 313(1)(பி) ன்படி கடந்த 18.03.2026 அன்று எடுத்துரைத்து வினவியபோது பொய்சாட்சி என்று கூறி 1ம் எதிர்மனுதாரர் பக்கம் சாட்சி உண்டு என்றும் எடுத்துரைத்துள்ளார்கள்.

6) மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர், 1ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றம் பிறப்பித்த ம.சா.ஆ.1 DVC NO.2/2021 வழங்கிய உத்தரவை 1ம் எதிர்மனுதாரர் மீறியுள்ளார் என்றும், நடைமுறைப்படுத்தவில்லை என்றும், மேலும் 1ம் எதிர்மனுதாரர் மேல்முறையீடு செய்து ம.சா.ஆ.2 உத்தரவு பெற்றுள்ளார் என்றும், அந்த உத்தரவில் நகையை பொறுத்து 9 பவுன் என்பது 6 பவுனாகவும், ஜீவனாம்சத்தை பொறுத்து 15 பவுன் என்பதை 12 பவுனாக குறைத்து மாற்றம் செய்தும், மற்றப்படி விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்து வழங்கப்பட்ட உத்தரவையும், நடைமுறைப்படுத்தவில்லை என்றும் மீறியுள்ளார் என்றும், எதிர்மனுதாரர் தனது குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளார் என்றும், அதனால் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்கும்படி வாதிட்டார்.

7) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், 1ம் எதிர்மனுதாரர் விவசாய கூலி வேலை செய்து வருகிறார் என்றும், உத்தரவு பிறப்பித்த பிறகு எந்த இடையூறும் மனுதாரருக்கு செய்யவில்லை என்றும், மொத்தமாக ஜீவனாம்சத் தொகை செலுத்த தயாராக உள்ளதாகவும், ஆனால் உத்தரவில் குறிப்பிட்டுள்ள தொகை செலுத்தும் அளவுக்கு வசதி இல்லை என்றும், வீடு வழங்க தயாராக இருப்பதாகவும், ஆனால் 1ம் எதிர்மனுதாரர் வசிக்க தயாராக இல்லை என்றும், நகைகள் மனுதாரரே எடுத்துச் சென்றுவிட்டார் என்றும், அதனால் 1ம் எதிர்மனுதாரர் உத்தரவை மதித்து நடக்க

தயாராக உள்ளார் என்றும் அதனால் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

8) **இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் 1 ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றம் DVC NO. 2/2021 ல் வழங்கிய உத்தரவை நடைமுறைப்படுத்தவில்லையா? மேலும் மீறியுள்ளாரா? என்பதை பற்றியும் மீறியிருந்தால் 1 ம் எதிர்மனுதாரருக்கு என்ன தண்டனை என்பது பற்றி தீர்மானிக்கப்படவேண்டும்.**

9) மனுதாரர் பரிமளா தனது சாட்சியத்தில், குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டப்பிரிவு 31ன்படி தாக்கல் செய்த மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை அப்படியே முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளார். ம.சா.ஆ.1 ஆக இந்நீதிமன்றம் DVC NO. 2/2021 வழக்கில் வழங்கிய உத்தரவு சான்றிட்ட நகல் மற்றும் ம.சா.ஆ.2 ஆக மாண்புமிகு கரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றம் Criminal Appeal No. 169/2024 என்ற மனுவின் மீது வழங்கிய உத்தரவு சான்றிட்ட நகல் குறியீடு செய்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.சா.ஆ.1 ஆக இந்து திருமண அசல் மனு எண்.14/2014 வழக்கில் வழங்கிய உத்தரவு சான்றிட்ட நகல் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10) மனுதாரர் தனது குறுக்கு விசாரணையில், இந்நீதிமன்றம் உத்தரவை மதித்து எனக்கு மொத்தம் ரூ.3,00,000/ ஜீவனாம்சமும், குழந்தைகளுக்கு வீடும் எனது கணவர் எழுதி வைக்கிறார் என்றால் இது வேண்டாம் பத்தாது. எனது குழந்தைகளின் திருமண செலவு எனது கணவரே ஏற்றுக் கொள்கிறார் என்றால் தலா ரூ.20,00,000/– மொத்தம் ரூ.40,00,000/– வேண்டும். திருமணத்தின் போது சீர்வரிசை செய்த நகை 6 பவுன் எனது கைவசம் உள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்ற உத்தரவை மதித்து எனது கணவர் சேர்ந்து வாழ்ந்து எனது தேவைகளையும், குழந்தைகளின் தேவைகளையும் பார்த்துக் கொள்ள தயாராக உள்ளார் என்றால் எனது கணவர் இன்னொரு கல்யாணம் செய்து விட்டார். நான் தொடர்ந்து எனது கணவருடன் சேர்ந்து வாழவில்லை என்பதால் மனுவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

11) மனுதாரர் தரப்பில் எ.சா.1 குறுக்குவிசாரணை செய்த போது நான் மேல்முறையீடு செய்யததில 1 முதல் 3 மனுதாரர்க்கு உத்தரவிட்ட ஜீவனாம்ச

தொகை ரூ.15,000/−லிருந்து ரூ.12,000/−ஆக 10.09.2025 அன்று குறைக்கப்பட்டது என்றால் சரிதான். அன்றிலிருந்து இன்று வரை எந்த ஜீவனாம்ச தொகையும் மனைவிக்கு செலுத்தவில்லை என்றால் சரிதான். DVC 02/2021 வழக்கில் பெறப்பட்ட உத்தரவில் இருந்து 10.09.2025 வரை எந்த ஜீவனாம்சமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது மனைவி பெறப்பட்ட உத்தரவிலிருந்து 05.04.2021லிருந்து 10.09.2025 வரை 54 மாதங்கள் மாதம் ரூ.12,000/− வீதம் மொத்தம் ரூ.6,48,000/− மனுதாரருக்கு கொடுக்கப்பட வேண்டிய கடமைப்பட்டவர் என்றால் சரிதான். 10.10.2025 முதல் 10.01.2026 வரை நான்கு மாதங்களுக்கு ரூ.12,000/− வீதம் ரூ.48,000/− கொடுக்கப்பட வேண்டிய கடமைப்பட்டவர் என்றால் சரிதான். DVC 02/2021 உத்தரவின் அடிப்படையில் வழக்கின் இழப்பீட்டு தொகையாக ரூ.25,000/− கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான் என ஒப்புக் கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

12) DVC NO. 2/2021 வழக்கில் உத்தரவு வழங்கப்பட்டதையும் 1ம் எதிர்மனுதாரர் மேற்படி உத்தரவுக்கு எதிராக கரூர் அமர்வு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து Criminal Appeal No. 169/2024 ல் மாதம் ஜீவனாம்சம் ரூ.15,000/− என்பது ரூ.12,000/−ம் ஆகவும், 9 பவுன் என்பது 6 பவுனாகவும் மாற்றி அமைக்கப்பட்டு விசாரணை நீதிமன்ற உத்தரவு உறுதி செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதை இரு தரப்பிலும் ஒப்புக் கொள்கிறார்கள் மறுக்கவில்லை.

13) DVC NO. 2/2021 ல் வழக்கில் 24.07.2024 அன்று வழங்கப்பட்ட உத்தரவுக்கு பிறகு மனுதாரர், 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுன் சேர்ந்து வாழ்ந்தார் என்று மனுவில் குறிப்பிடவில்லை. அதனால் மனுவில் உத்தரவு வழங்கப்பட்ட பிறகு 1 முதல் 3 எதிர்மனுதாரர்களால் மனுதாரருக்கு எந்த குடும்ப வன்முறை செயல்களும் நடக்கவில்லை என்பது தெரிய வருகிறது.

14) 1 ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கும், குழந்தைக்கும் 1ம் எதிர்மனுதாரரின் வீட்டில் வசிப்பதற்கு வசிப்பிட உத்தரவு வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், 1ம் எதிர்மனுதாரர் வீடு வழங்க ஒப்புக் கொண்டாலும், அவருக்கு வசிப்பிட வீடு கொடுக்கவில்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

15) மேலும், 1ம் எதிர்மனுதாரர் திருமணத்தின் போது 1ம் மனுதாரருக்கு போட்ட 9 பவுன் நகை என்பது ம.சா.ஆ.2 மேல்முறையீட்டு உத்தரவில் 6 பவுனாக குறைத்து உத்தரவிடப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் மேற்படி 6 பவுன் நகைகளை 1ம் மனுதாரரிடம் வழங்கவில்லை என்பதை குறுக்கு விசாரணையில் ஒப்புக் கொண்டுள்ளார். அதனால், 6 பவுன் வழங்க வேண்டும் என்ற உத்தரவை செயல்படுத்தாமல் மீறியுள்ளார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்நீதிமன்றம் 1 முதல் 3 மனுதாரர்களுக்கு மாதம் ரூ.15,000/− ஜீவனாம்சம் செலுத்தவில்லை என்ற உத்தரவு மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மாதம் ரூ.12,000/− ஆக மாற்றியமைக்கப்பட்டும் இன்றைய தேதி வரை 1ம் எதிர்மனுதாரர் ஜீவனாம்சத் தொகை மற்றும் நஷ்ட ஈடு 2, 3 மனுதாரர்களுக்கு அரசாங்கத்தால் கொடுத்த உதவித்தொகை ரூ.18,000/− ஆகியவற்றை திருப்பி செலுத்தவில்லை என்பது 1ம் எதிர்மனுதாரரின் குறுக்கு விசாரணை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

16) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்துள்ள எ.சா.ஆ.1 HMOP NO.14/2016 10.07.2019 ம் தேதியிட்ட மாண்புமிகு சார்பு நீதிமன்றம் குளித்தலை நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவில் 1ம் எதிர்மனுதாரரான பூமிநாதன் மனுதாரர் பரிமளாவுக்கு எதிராக இந்து திருமண சட்டம் பிரிவு 9 ன் கீழ் சேர்ந்து வாழ கலந்துரை உரிமை மீட்டெடுப்பு பரிகாரம் கோரி மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரர் பூமிநாதனுடன் எதிர்மனுதாரர் பரிமளா மூன்று மாத கால அவகாசத்தில் சேர்ந்து வாழுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி, உத்தரவின் படி இந்த வழக்கின் 1ம் மனுதாரரான பரிமளா அவரது கணவரான பூமிநாதனுடன் சேர்ந்து வாழவில்லை என்பது தெரிய வருகிறது. அதற்காக இந்த நீதிமன்றத்தில் எந்த பரிகாரமும் கேட்க முடியாது. தீர்ப்பு வழங்கிய நீதிமன்றத்தில் தான் நிறைவேற்று மனு தாக்கல் செய்து உரிய பரிகாரம் பெற்றுக் கொள்ள முடியும். எ.சா.ஆ.1 எதிரி தரப்பு வழக்கிற்கு உதவுவதாக இல்லை.

17) 1ம் எதிர்மனுதாரர் மாதம் ரூ.12,000/− ஜீவனாம்சமும், இழப்பீட்டு தொகை ரூ.25,000/−யும் 2, 3 மனுதாரர்களுக்கு அரசாங்க உதவித் தொகை கொடுத்த ரூ.18,000/− வசிப்பிட உத்தரவு 6 பவுன் நகை ஆகியவை 1ம் எதிர்மனுதாரருக்கு கொடுத்த உத்தரவை நிறைவேற்றி மீறவில்லை என்பது நிரூபிக்கவில்லை. மாறாக, மனுதாரர் மேற்படி உத்தரவை 1ம் எதிர்மனுதாரர் நிறைவேற்றவும் இல்லை மீறியுள்ளார் என்று நிரூபித்துள்ளார்.

18) இந்த வழக்கில் சுருக்குமுறை விசாரணை நடைமுறை பின்பற்றவில்லை. அழைப்பாணை வழக்கு நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது. மனுதாரர் முதல் விசாரணை வாக்குமூலம் அளித்து முழுவதுமாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டுள்ளது. சாட்சியத்தில் சராம்சம் மட்டும் நீதிபதியால் பதிவு செய்யாமல் முழு முதல் விசாரணையிலும், குறுக்கு விசாரணையிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

19) இந்நீதிமன்றம் கடந்த 24.07.2024 அன்று DVC NO. 2/2021 வழக்கில் வழங்கப்பட்ட உத்தரவை 1ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு குடியிருக்க வீடு ஒதுக்கவில்லை என்பதும், உத்தரவை மீறியுள்ளார் என்றும், நகைகளை கொடுக்காமல் மீறியுள்ளார் என்றும், மாத ஜீவனாம்சம் கொடுக்காமல் மீறியுள்ளார் என்றும், 2, 3 மனுதாரருக்கு கொடுத்த அரசாங்க உதவித் தொகையை கொடுக்காமல் 1ம் எதிர்மனுதாரர் மீறியுள்ளார் என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் 2, 3 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக விசாரணை நீதிமன்றமான இந்நீதிமன்ற உத்தரவிலும் மேல்முறையீட்டு நீதிமன்ற உத்தரவிலும் எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை. அதனால், 2, 3 எதிர்மனுதாரர்கள் எந்த உத்தரவையும் மீறவில்லை என்பதும் செயல்படுத்தாமல் இல்லை என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதனால், 2, 3 எதிர்மனுதாரர்களை பொறுத்து இந்த வழக்கு 278 (1) ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. ஆனால், 1ம் எதிர்மனுதாரர் மட்டுமே குடும்ப வன்முறை பெண்கள் பாதுகாப்புச்சட்டம் பிரிவு 31 ன்படி தண்டனைக்குரிய குற்றவாளி என்றும், 1ம் எதிர்மனுதாரர் கடந்த 2 வருடத்திற்கு மேலாக உத்தரவை நிறைவேற்றாமல் இருந்துள்ளதால் அவருக்கு வழங்க கூடிய தண்டனையை இந்நீதிமன்றம் கருணை காட்டாமல் முழு தண்டனையும் வழங்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜரில்லை. அதனால், தண்டனைப் பற்றிய விவரம் எதிரியிடம் கேட்கப்படவில்லை.

இறுதியாக 1ம் எதிரி பூமிநாதன் குடும்ப வன்முறை பெண்கள் பாதுகாப்புச்சட்டம் பிரிவு 31ன்படி குற்றவாளி என்றும், 1ம் எதிரிக்கு 1 வருட காலம் சாதாராண சிறைத்தண்டனை விதித்து கு.வி.மு.ச பிரிவு 255(2) ன்படி தீர்ப்பளிக்கப்படுகிறது. 2, 3 எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று கு.வி.மு.ச.255(1)ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகளிடம் வழக்கு விசாரணையின் போது எந்த பிணைமுறியும் வாங்கவில்லை. அதனால் பிணைமுறி பற்றி உத்தரவு பிறப்பிக்கவில்லை. இருதரப்பிலும், சொத்துக்கள்

எதுவும் தாக்கல் செய்யவில்லை. அதனால் சொத்து பற்றிய உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை. அபராதம் விதிக்கவில்லை. எதிரிக்கு பிணை விட முடியாத பிடியாணை பிறப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

2026-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ம் நாள் இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு இன்று என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMAIYAH BAGYARAJ
Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2026.06.19 00:38:01 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**

**பின் இணைப்பு**

**மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்**

| | |
|---|---|
| ம.சா.1 | பரிமளா |

**மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்**

| **ஆவண எண்.** | **தேதி** | **ஆவணம்** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 24.07.2024 | DVC.No.02/2021 ன் உத்தரவு | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | | CrlA.No.169/2024 ன் உத்தரவு | சான்றிட்ட நகல் |

**மனுதாரர் தரப்பு சான்று பொருட்கள் :- இல்லை**

**எதிர்மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சி**

| | |
|---|---|
| எ.சா.1 | பூமிநாதன் |

**எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்**

| **ஆவண எண்.** | **தேதி** | **ஆவணம்** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|
| எ.சா.ஆ.1 | - | HMOP 14/2014 உத்தரவு | சான்றிட்ட நகல் |

**எதிரிகள் தரப்பில் சான்று பொருள்:- இல்லை.**

RAMAIYAH BAGYARAJ
Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2026.06.19 00:38:06 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**